மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பாடத் திட்டம் நுழைவது சரியா தவரு என்று சொல்கிற ஆற்றல் நமக்கில்லை. அறிவார்ந்த, கற்றறிந்த வல்லுநர் குழு ஆராய்ந்து, அகில இந்திய அடிப்படையில் செய்யப்பட்ட சிபாரிசை அடிப்படையாக வைத்து, இந்த மாநிலத்தில் இப் பணியை ஏற்றிருக்கிற வல்லுநர்கள் மட்டுமே இத்தகைய கருத்துக் களை உருவாக்கித் தருகிருர்கள். அதைத்தான் நாம் செயல் படுத்துகிறேம். ஆகவே, பயன்படுகின்ற கல்வியைப் புகுத்த வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்தப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதில் பயன் இல்லை என்று சொல்வ தற்கில்லை. ஏற்கெனவே இருந்த குறைபாடுகள் இதனுல் நீக்கப் பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புகுமுக வகுப்பில் தமிழில் படிக்கும் மாணவர்கள்

*642 வினு—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி.யு. சி. வகுப்பில் தமிழைப் பாடமொழியாகப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் குறைந்துள்ளதா ?

(இ) அப்படியானல், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1972-73 ஆம் ஆண்டைவிட 1973-74-ல் புகுமுக வகுப்பில் தமிழைப் பாடமொழியாகப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந் துள்ளது. ஆனல், 1974-75-ல் இது 1973-74 ஆம் ஆண்டைவிட உயர்ந்துள்ளது.

(இ) 1973-74-ல் ஏற்பட்ட இந்தக் குறைவு தமிழ் போதனு மொழி வகுப்பில் மட்டுமல்லாமல் பொதுவாக பட்டப்படிப்பு வகுப்பிலும், ஆங்கில போதனு மொழி வகுப்பிலும் ஏற்பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், தமிழைப் பாடமொழியாகக் கொண்டு படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட அதிகமாக இருப்பதாகச் சொன்னுர்கள். அவர் களுக்கு விசேஷ சலுகை எல்லாம் அளிக்கப்படுவதாகச் சொல்லப் பட்டிருந்தது. அந்தச் சலுகைகள் எல்லாம் முறையாக வழங்கப் படுகின்றனவா? இன்னும் அதிகமான சலுகை அளிக்க புதிய திட் டம் ஏதாவது இருக்கிறதா ?

1975 ஏப்ரல் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழைப்பாடமொழியாக எடுத்துப்படிக்கின்ற மாணவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற வகையில் புகுமுக வகுப்பில் நூல்கள் வாங்க 50 ரூபாயும், பட்டப் படிப்பில் ஆண்டு ஒன்றுக்கு 180 ரூபாயும் தந்துவருகிறோம். அவர்களுக்கு இந்த வகையில் எந்த அளவுக்கு ஊக்கம் தரவேண்டுமோ அந்த அளவுக்குத் தந்துவருகிறோம். அந்த முயற்சியில், அவர்களுக்கு கல்லூரிகளில், பல்வேறு கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சில பல கல்லூரிகளில் தமிழ்ப் பாடமொழி வகுப்புகளில் மட்டுமல்லாமல் ஆங்கிலப்பாடமொழி வகுப்புகளில்கூட இடம் காலியாகஇருக்கிறது. ஆனால் சில குறிப்பிட்ட கல்லூரிகளில், பெரும் நகரங்களில் இருக்கிற கல்லூரிகளில் இட நெருக்கடி இருக்கிறது. மாணவர்கள் சிற்றூர்களில் இருக்கிற கல்லூரிகளுக்குச் சென்று படிக்க போதிய ஆர்வம் காட்டாததால் அங்கெல்லாம் இடம் காலி இருக்கிறது; சேருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இது தமிழ் பாட மொழிக்கு மட்டுமல்ல; ஆங்கில பாட மொழிக்கும்தான். பெரும் நகரங்களில் கூட சில பல கல்லூரிகளில் இடம் காலி இருக்கிறது. 1973—74ஆம் ஆண்டைவிட 1974—75ஆம் ஆண்டில் அதிக மாணவர்கள் படித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மேலும் உயரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

*643 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the action taken by the Government to avoid delay in payment of incentive money to Tamil medium students in the Colleges?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை அளிப்பதில் வரம்பு கடந்த தாமதம் ஏதும் ஏற்படவில்லை.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கல்லூரிகளில் தமிழை பாடமொழியாக ஆக்கும் எண்ணம், தாய்மொழியில் படிக்கின்றவர்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்படும் என்ற அடிப்படையில் ஏற்பட்டதாகும்; அந்த அடிப்படையில் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப் படிக்கின்றவர்களின் தேர்வு, திறமை நல்ல முறையில் போட்டி போடுவதாக இருக்க வேண்டும். ஆனால் நிலைமை அப்படி இல்லை. அதற்குக்காரணம் கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாகக் கொண்டுவருவதை பலர் எதிர்க்கிறார்கள். ஆங்கிலத்தைப் பாட மொழியாகக் கொண்டவர்கள் தங்களுடைய சுயநலத்தைக் கருத்தில் கொண்டு, தங்களுடைய உரிமை, தாங்கள் அனுபவித்து வந்த சலுகை பாதிக்கப்படுகிறது என்ற எண்ணம் கொண்டசிலமேல் சாதிக்கா ரர்கள்எதிர்ப்புதெரிவிக்கிறார்கள் என்ற